www.agaram.lk

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

## நான்காம் தவணைப் பரீட்சை - 2021

# Conducted by Field Work Centre, Thondaimanaru.

# 4th Term Examination - 2021

FWC

சித்திரக்கலை - I
Art - I

Gr. 13 (2021)

Three Hours

**அறிவுறுத்தல்கள் :**

❖ இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

**பகுதி - I**

➢ எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடையளிக்குக.
➢ ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் இலக்கத்தை எதிரே உள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

**பகுதி - II**

➢ மூன்று உப பகுதிகளைக் கொண்டது.
➢ **அ பகுதியிலிருந்து இரு வினாவும், ஆ, இ பகுதிகளில் இருந்து ஒரு வினா வீதம் தெரிவு செய்து, எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.**
❖ பகுதி I, பகுதி II, ஆகியவற்றின் விடைத்தாள்களை ஒன்றாக இணைத்துக் கையளிக்குக.


| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் I | |
| பகுதி | புள்ளி |
| I | |
| II | |
| மொத்தம் | |

## பகுதி – I

❖ ***01 தொடக்கம் 05 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் மிகப் பொருத்தமான விடையை A, B, C, D, E எனப் பெயரிடப்பட்டுள்ள பின்வரும் சிலைகளிலிருந்து தெரிவு செய்க.***


A


B


C


D


E

01. A எழுத்தினால் காட்டப்பட்டுள்ளது.
   1) கடினச் செயலை விழுமிய ரீதியாகவும் பௌதிக ரீதியாகவும் எடுத்துக்காட்டும் படைப்பாகும்.
   2) போதிசத்துவரின் கடினச் செயலை யதார்த்த பூர்வமாகச் சித்தரிப்பதற்கு காந்தாரக் கலைஞர் மேற்கொண்டதொரு முயற்சியாகும்.
   3) காந்தாரக் கலைஞரின் ஊடாகப் பயன்பாட்டையும் கலைத்திறனையும் வெளிப்படுத்தும் சிறந்த உதாரணமாகும்.
   4) பௌத்த இலக்கியத்தில் விவரிக்கப்படும் கடினச் செயல் யதார்த்த பூர்வமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளமையாகும்.
   5) போதிசத்துவரின் மெலிந்த உடலின் தன்மையை கல்லினாலான ஊடகத்தில் சித்தரிக்கும் இந்தியச் சிலையாகும். (............)

02. B எழுத்தினால் வெளிப்படுத்தப்படுவது.
   1) கிரேக்க செந்நெறிக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட உன்னதமானதொரு படைப்பாகும்.
   2) மறுமலர்ச்சிக் காலத்தில் உருவான அதியுன்னத வெண்பளிங்குச் சிலையாகும்.
   3) கம்பீரமான நபரொருவரைச் சித்தரிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட உயர்மட்ட முயற்சியாகும்.
   4) ஹெலனிஸ்டிக் காலத்தில் வாழ்ந்த சிறந்த சிற்பக் கலைஞர் ஒருவரின் சிலையாகும்.
   5) பாப்பரசர் ஜீலியசின் புதைகுழியிலுள்ள பிரதான சிலையாகும். (............)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

03. C எழுத்தினால் காட்டப்பட்டுள்ளது.
1) இந்து சமயச் செல்வாக்குடன் வெண்கல வார்ப்பு முறையில் தயாரிக்கப்பட்டதொரு சிலையாகும்.
2) மகாராஜனைப் போன்று அமர்ந்திருக்கும் அரச பரம்பரையைச் சேர்ந்த ஒருவரின் சிலையாகும்.
3) அனுராதபுரத்தின் இறுதி அரைக் காலப்பகுதிக்குரிய அவலோகிதேஷ்வரர் சிலையாகும்.
4) வெண்கல திண்ம வார்ப்பு முறையில் தயாரிக்கப்பட்டுள்ள தங்க மூலாம் பூசப்பட்ட சிலையாகும்.
5) வெண்கல ஊடகத்தினால் வார்ப்புச் செய்யப்பட்டுள்ள பத்மபாணி போதிசத்துவர் சிலையாகும் (...........)

04. D எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சந்திரவட்டக்கல்.
1) எண்ணக்கரு ரீதியாகச் செதுக்கப்பட்ட மென்புடைப்புடைய பலகைச் செதுக்கலாகும்.
2) படிக்கட்டொன்றின் அடிப்பகுதியில் இடப்பட்டுள்ள செதுக்கல் செய்யப்பட்ட பலகையாகும்.
3) பொலன்னறுவைக் கலைஞரின் பேராற்றலின் மகிமையை எடுத்துக்காட்டும் செதுக்கலாகும்.
4) அனுராதபுர செதுக்கல் கலைஞரின் திறனைச் சித்திரிக்கும் நிர்மாணிப்பாகும்.
5) பௌத்த சமயத்தில் விவரிக்கப்படும் மறுபிறவி பற்றிச் சித்திரிப்பதற்கு எடுக்கப்பட்டதொரு முயற்சியாகும். (...........)

05. E எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சிந்துவெளி முத்திரையினால் சித்திரிக்கப்படுபவர்.
1) கொம்புகளைக் கொண்ட கிரீடம் அணிந்த கடவுளாவார்.
2) வனத்திற்கும் பிராணிகளுக்கும் அதிபதியான கடவுளாவார்.
3) யோகாசன நிலையிலுள்ள யோகியாவார்.
4) கோம்புகளைக் கொண்ட கிரீடம் அணிந்த பசுபதியாவார்.
5) திரிசூலமொன்றைக் கொண்ட கிரீடம் அணிந்த பூசகராவார். (...........)

❖ ***06 தொடக்கம் 10 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.***

06. ஐரோப்பாவில் பின் மனப்பதிவுவாதம் ஆரம்பிப்பதற்கு ஏதுவான முக்கிய காரணம் யாது?
1) பொருட்களை விட உணர்வு வெளிப்பாடு முக்கியமானதாகக் கருதப்பட்டமையாகும்.
2) ஒளியும் இருளும் முப்பரிமாண இயல்புகளைக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டமையாகும்.
3) யதார்த்தபூர்வ வெளிப்பாட்டு மரபானது, ஓவியக்கலையின் முன்னேற்றத்துக்குத் தடையாகக் கருதப்பட்டமையாகும்.
4) மனப்பதிவுவாதத்தில் காணப்பட்ட வரையறைகளைக் கடந்து புதிய வழிமுறைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டமையாகும்.
5) இயற்கைச் சித்திரிப்பைவிட கற்பனைகளின் மீது கலைஞர்களின் ஈடுபாடு அதிகரித்தமையாகும். (...........)

07. பரிதிவட்டம் வீசுபவன் என்ற கிரேக்க சிலை தொடர்பான மிகப் பொருத்தமான கூற்று
1) செயல்பாட்டுடன் கூடிய மனித மெய்நிலைகளை சலவைக் கல்லில் சிலையாக வடிப்பதற்கு எடுத்துள்ள முயற்சியாகும்.
2) கிரேக்க கெலனிஸ்ட் காலத்து சிறந்த சிற்பியின் படைப்பாகும்.
3) பக்சிரெலஸ் சிற்பியின் உயர்தரப் படைப்பாகும்.
4) உரோம சிற்பியினால் வார்க்கப்பட்ட வெண்கலச் சிலையாகும்.
5) கிரேக்க மேன்மைக்கால சிற்பியான அண்டிசோவுடைய படைப்பாகும். (...........)

08. அவுக்கண புத்தர் சிலைகள் தொடர்பான மிகப் பொருத்தமான கூற்று
1) இயற்கைக் கற்பாறையில் நேரான நிலையில் செதுக்கப்பட்ட சிலை
2) அநுராதபுரக் காலத்தில் நிறுவப்பட்ட சிலை மனைக்கு உரிய சிலையாகும்.
3) ஆந்திரா கலை மரபின் கீழ் நிருமாணிக்கப்பட்ட சிறந்த சிலையாகும்.
4) தாதுசேன அரசன் காலத்தில் நிறுவப்பட்ட காலசேன விகாரைக்குரிய புத்தர் சிலையாகும்.
5) வெளி இயல்புகளின் படி மாளிகாவில புத்தர் சிலைக்கு சமமான சிலையாகும். (...........)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

09. எகிப்திய நாகரிகத்திற்குரிய நெபர்ற்றி சிலை
   1) அமர்ணா காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட மார்பளவுப் பெண்சிலைத் தொகுதிகளுள் ஒன்றாகும்.
   2) எகிப்திய பாரம்பரிய கலைப் பண்புகளை வெளிப்படுத்தும் அமர்ணாவில் நிர்மாணிக்கப்பட்ட மார்பளவுச் சிலையாகும்.
   3) கீசாயியில் இருந்து அமர்ணாவுக்குக் கொண்டுவரப்பட்ட பெண் ஒருவரின் மார்பளவுச் சிலையாகும்.
   4) இயற்கை பரிமாணத்துடன் அமர்ணாவில் நிர்மாணிக்கப்பட்ட வசீகரமான அரசி ஒருவரின் மார்பளவுச் சிலையாகும்.
   5) அமர்ணா காலத்து வெண்கல சிலையாகும் (...........)

10. சந்திரவட்டக்கல் சிற்பம் இலங்கையின் கலை நிர்மாணிப்புகளுள் பெறுமதி வாய்ந்த ஒரு நிர்மாணிப்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டமைக்குக் காரணம்.
   1) வழிபாட்டுத் தலம் ஒன்றினுள் நுழைகின்ற வாயிலில் அமைந்துள்ளமை ஆகும்.
   2) உள்நாட்டுக் கலைஞரின் பேராற்றலை எடுத்துக்காட்டும் பெறுமதி வாய்ந்த நிர்மாணிப்பு என்பதனால் ஆகும்
   3) லௌகீகப் பிணைப்புக்களிலிருந்து விடுபடுதலை வெளிப்படுத்துவதற்காக நிர்மானிக்கப் பட்டுள்ளமை ஆகும்.
   4) கருங்கல் ஊடகத்தினால் சிறுபுடைப்பு நுட்பத்தில் வெளிப்பட்டுத் தெரியும் வகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதால் ஆகும்
   5) காலத்திற்கு காலம் அவை மாற்றம் பெற்றுச் சென்றுள்ளமை ஆகும் (...........)

❖ **வினாஇலக்கம் 11 தொடக்கம் 15 வரை கேட்கப்பட்டிருக்கும் வினாக்களுக்கு மிகச் சரியான விடையினை கீழ்தரப்பட்ட 1 தொடக்கம் 10 வரையுள்ள படங்களில் இருந்து தெரிவு செய்க**







1 2 3 4 5







6 7 8 9 10

11. பத்மாசன முறையில் அமர்ந்திருக்கும் புத்தசிலைகள் எவை?
   1) 2,3,5  2) 2,7,10  3) 3,5,8  4) 1,2,3  5)7,8,9 (...........)

12. வட்டதாகேயோடு தொடர்புபட்ட புத்தசிலை எது?
   1) 6  2) 7  3) 8  4) 9  5) 10 (...........)

13. ஒரே கலை மரபை வெளிப்படுத்தும் புத்தசிலைகள் எவை?
   1) 7,5  2) 2,7  3) 5,8  4) 2,3  5)8,9 (...........)

14. மகாயான பௌத்த எண்ணக்கருவை வெளிப்படுத்தும் புத்தசிலை எது?
   1) 3  2) 7  3) 6  4) 9  5) 10 (...........)

15. கொழும்பு நூதனசாலையில் வைக்கப்பட்டுள்ள புத்தசிலைகள் எவை?
   1) 7,6  2) 2,5  3) 5,6  4) 2,10  5)7,9 (...........)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

❖ **11 தொடக்கம் 15 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

16. வெற்றிகரமான புத்தக மேலட்டை நிர்மாணிப்பில் மிக முக்கியமானதாய் அமைவது.
    1) உள்ளடக்கத்துக்குப் பொருத்தமான விதத்தில் வர்ணங்கள், வடிவங்களின் பயன்பாடும் திட்டமிடலுமாகும்.
    2) தலைப்பிற்குப் பொருத்தமான ஆக்கப்பூர்வமான எழுத்துக்களைப் பயன்படுத்துதலாகும்.
    3) பல்வேறு தொழில்நுட்ப முறையியல்களைப் பொருத்தமான விதத்தில் பயன்படுத்துதலாகும்.
    4) பொருத்தமான ஓவியங்களையும் உருவங்களையும் கவர்ச்சிகரமாக நிர்மாணித்தலாகும்.
    5) அச்சிடல் தொழில்நுட்பத்துக்கு ஏற்றவாறு வர்ணங்களைப் பயன்படுத்தத்தக்க விதத்தில் நிர்மாணித்தலாகும். (...........)

17. ஓவியப்பாங்கான ஒழுங்கமைப்பு எனப்படுவது.
    1) உளரீதியான எண்ணக்கருகொன்றை எடுத்துக்காட்டும் வர்ணமயமான வெளிப்பாடாகும்.
    2) கற்பனையொன்றை அல்லது அனுபவமொன்றை அடிப்படையாகக் கொண்ட கட்புல வெளிப்பாடாகும்.
    3) வர்ணங்கள், கோடுகள், வடிவங்கள் ஆகிய ஊடகங்களினால் செய்யப்படும் இயற்கையான வெளிப்பாடாகும்.
    4) அலங்கார வடிவங்கள், பிரகாசமான வர்ணங்கள் ஆகியவற்றைக் கொண்ட வெளிப்பாடாகும்.
    5) ஏதேனுமொரு தலைப்பை ரசனைக்குரியதாகவும் ஆக்கப்பூர்வமானதாகவும் வெளிப்படுத் தலாகும். (...........)

18. அச்சிடலுக்காக பரவல் அலங்காரமொன்றை நிர்மாணிக்கும் போது மிக முக்கியமானதாய் அமைவது.
    1) எளிய வடிவங்களையும் வரையறுக்கப்பட்ட வர்ணங்களையும் பயன்படுத்தலாகும்.
    2) நிர்மாணிக்கப்பட்ட அலங்காரப் பகுதியை ஏனைய பகுதிகளுடன் சகல பக்கங்களிலும் தொடர்புபடுத்துதலாகும்.
    3) ஆக்கபூர்வமான வடிவங்களின் பயன்பாடும் மனங்கவர் வர்ணங்களைப் பயன்படுத்துதலுமாகும்.
    4) சதுரக்கோலமொன்றின் மீது அமைத்து சமவளவான பல்வேறு அலகுகளினால் முழுப் பரப்பையும் நிரப்பும் விதத்தில் வரைதலாகும்.
    5) பயன்படுத்திய வடிவங்களில் குளிர், வெப்ப வர்ணங்களைப் பொருத்தமானவாறு பயன்படுத்துதலாகும். (...........)

19. அசையாப் பொருள்கூட்ட வரைதலின்போது எதிர்பார்க்கப்படுவது.
    1) அடிப்படைக் கோட்பாடுகளுக்கமைய பொருள்கூட்டத்தைத் தம் விருப்பப்படி வரைந்து, வர்ணமிட்டு பூரணப்படுத்துதலாகும்.
    2) அடிப்படைக் கோட்பாடுகளைப் பயன்படுத்தி, இயல்புகள் வெளிப்படும் விதத்தில் வரைந்து வர்ணமிடுதலாகும்.
    3) பொருள்கூட்டத்திலுள்ள பெருள்களை முப்பரிமாண இயல்புகள் வெளிப்படும் விதத்தில் வரைந்து வர்ணமிடலாகும்.
    4) பொருள்கூட்டத்தில் உள்ளடங்கியுள்ள பொருள்களைச் சரியாக வரைந்து, வர்ணமிடலாகும்.
    5) ஒவ்வொரு பொருளையும் தனித்தனியாக வரைந்து, அவற்றின் இயல்புகளுக்கேற்ப வர்ணமிடலாகும். (...........)

20. கலையாக்கத்தை மதிப்பிடும் போது மிக முக்கியமானது
    1) ஊடகத்தின் மூலம் தொனிப்பொருளை வெளிப்படுத்தியுள்ள தன்மையும் அதன் சிறப்பியல்பும்
    2) தொனிப் பொருளிலுள்ள கருத்து
    3) ஊடகத்தைக் கையாளும் பொழுது கலைஞன் வெளிக்காட்டியுள்ள திறன்
    4) கோட்பாடுகளைப் பயன்படுத்தியுள்ள சிறப்பு
    5) புதிய கோட்பாடுகளை உள்வாங்கி வெளிக்காட்டியுள்ள திறன் (...........)



agaram.lk

❖ **21 தொடக்கம் 25 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் மிகப் பொருத்தமான விடையை P,Q,R,S,T எனப் பெயரிடப்பட்டுள்ள பின்வரும் ஓவியங்களிலிருந்து தெரிவுசெய்க.**







| P | Q | R | S | T |
|---|---|---|---|---|

21. P எழுத்தினால் காட்டப்பட்டுள்ள காட்டப்பட்டுள்ள கட்டடம்
    1) மிகப்பெரிய கற்பாறையொன்றின் மீது கட்டப்பட்டுள்ளதொரு விகாரையாகும்.
    2) புவனேகபாகு மன்னனின் ஆட்சிக்காலத்தில் கணேஸ்வராச்சாரியாரினால் நிர்மாணிக்கப்பட்டதாகும்.
    3) தென்னிந்திய கட்டடக்கலைப்பண்புகளுக்கமைய நிர்மாணிக்கப்பட்டதாகும்.
    4) பௌத்த, இந்துசமய நிலையமாக நிர்மாணிக்கப்பட்டதாகும்.
    5) கம்பளைக் காலத்தில் ஸ்தபதிராயர் என்ற கலைஞரால் நிர்மாணிக்கப்பட்டதாகும். (............)

22. Q எழுத்தினால் காட்டப்பட்டுள்ள கட்டடக்கலைப் படைப்பு
    1) அனுராதபுரக் காலத்திற்குரிய அரச பரம்பரையினருக்காக அமைக்கப்பட்ட கற்களினாலான நீர்த் தடாகமாகும்.
    2) அனுராதபுரக் காலத்திற்குரிய, கற்களினாலான தடாகங்களுள் மிகச் சிறந்த நிர்மாணிப்பாகும்.
    3) நீர்வளத் தொழில்நுட்ப தேர்ச்சியை எடுத்துக்காட்டும் பெறுமதிமிக்க, கற்களினாலான கலைப்படைப்பாகும்.
    4) அபயகிரி விகாரைப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட கற்களினாலான சோடித் தடாகமாகும்.
    5) சிறப்பாக மினுக்கல் செய்யப்பட்ட, கற்பலகைகளினால் நிர்மாணிக்கப்பட்டதாகும். (............)

23. R எழுத்தினால காட்டப்பட்டுள்ள கட்டடக்கலை நிர்மாணிப்பு
    1) இராஜராஜ சோழன் தன் மனைவிக்காக நிர்மாணித்த இரண்டாம் சிவாலயமாகும்.
    2) வெட்டித் தயாரிக்கப்பட்ட கற்றகடுகளைப் பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட சிவாலயமாகும்.
    3) பொலன்னறுவையில் அமைந்துள்ள சிவன் கோயிலாகும்.
    4) தென்னிந்தியர்கள் தமது பூஜை வழிபாடுகளுக்காக நிர்மாணித்த கோயிலாகும்.
    5) தென்னிந்திய சோழர்களின் கலைப் பண்புகளைச் சித்தரிக்கும் முதலாம் சிவாலயமாகும். (............)

24. S எழுத்தினால காட்டப்பட்டுள்ள அஜந்தா குகையானது
    1) ஓவியங்கள் வரையப்பட்ட குகைகளுள் ஒன்றாகும்.
    2) சைத்திய மண்டபமொன்றின் உட்புறக் காட்சியாகும்.
    3) அலங்காரமாகக் கட்டப்பட்ட விகாரை மண்டபமாகும்.
    4) பிக்குமார்களின் கூட்ட மண்டபமாகும்.
    5) அலங்காரத் தூண்களைக் கொண்ட வட்டவடிவ மண்டபமாகும். (............)

25. T எழுத்தினால காட்டப்பட்டுள்ள தேவாலயம்
    1) பாரா அரசர்களுக்காக நிர்மாணிக்கப்பட்டதாகும்.
    2) எகிப்தில் நிர்மாணிக்கப்பட்ட தேவாலயங்களுள் ஒன்றாகும்.
    3) ஹோரஸ் என்ற கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட எட்ஃபு தேவாலயமாகும்.
    4) எமோன் என்ற சூரியக் கடவுளுக்காக நிர்மாணிக்கப்பட்ட கர்ணாக் தேவாலயமாகும்.
    5) நைல் நதியின் கிழக்குக் கரையில் அமைந்துள்ள லக்சோர் தேவாலயமாகும். (............)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

❖ ***26 தொடக்கம் 30 வரையான ஒவ்வொரு வினாவிற்கும் மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.***

26. மகியங்கனையில் தாதுகர்ப்பத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற ஓவியங்களிடையே
   1) சச ஜாதகத்தைச் சித்திரிக்கும் சித்திரம் ஒன்று காணப்பட்டது.
   2) புத்தர் நிலை அல்லது ஞானம் பெறும் நிகழ்வைக் காட்டும் சித்திரத் துண்டும் கிடைத்துள்ளது.
   3) தபசி பள்ளுக தேபானன் காணப்படும் சித்திரத் துண்டும் கிடைத்துள்ளது.
   4) இந்திரஜால குகைக்கு சக்கர தெய்வம் வருகை தரும் சந்தர்ப்பத்தைக் காட்டும் சித்திரமும்
   5) கிடைத்துள்ளது.
   6) தேவர்கள் அமர்ந்திருக்கும் வடிவம் ஐந்தினைக் கொண்ட சித்திரமொன்றும் கிடைத்துள்ளது.
   (...........)

27. பொலநறுவையில் கிடைக்கப்பெற்ற நடராஜர் சிலையினால்
   1) நடனமாடும் கடவுளொருவர் சித்தரிக்கப்பட்டுள்ளார்
   2) சிவபெருமானின் பலமும் சக்தியும் சித்தரிக்கப்படுகிறது
   3) இறைவன் பக்தர்களின் மீது காட்டும் கருணை ஞாபகமூட்டப்படுகிறது
   4) சிவபெருமானின் ஐந்தொழில் தத்துவம் சித்தரிக்கப்படுகிறது
   5) சோழக் கலைஞர்களது கலைத்திறன் வெளிக்காட்டப்படுகிறது (...........)

28. மௌரிய கலைக்குரிய அசோகத் தூண்கள் பெருமளவில் நிர்மாணிக்கப்பட்டமை
   1) புத்தர் சரிதையுடன் தொடர்புபட்ட நிகழ்வுகள் நடைபெற்ற நிலையங்களை நினைவு படுத்துவதன் பொருட்டாகும்.
   2) அசோக மன்னனின் கீர்த்தியை நாட்டிற்கு வெளிப்படுத்துவதன் பொருட்டாகும்.
   3) அசோக மன்னனின் பௌத்த சமயத்தைப் பின்பற்றிய செய்தியைக் குறியீடாகக் கொள்வதன் பொருட்டாகும்.
   4) அசோக மன்னனின் தர்ம பிரசார செயற்பாடுகளை நினைவுறுத்துமுகமாகவாகும்.
   5) அசோக மன்னனின் கலிங்கத்து யுத்த வெற்றியை நினைவுறுத்துமுகமாகவாகும். (...........)

29. டெகாசின் "குளியல் பேசின்" என்ற ஓவியம்.
   1) நடிகைகளின் பல்வேறு அசைவு நிலைகள் தொடர்பாகச் செய்யப்பட்ட ஓவியச் சித்தரிப்பாகும்.
   2) முப்பரிமாண இயல்புகளை வெளிப்படுத்தும் விதத்தில் ஒளியும் இருளும் பயன்படுத்தப் பட்டுள்ளதாகும்.
   3) யதார்த்தவாத வெளிப்பாட்டின் போது மனித உருவங்களை வரையும் கலைஞரின் ஆற்றலை எடுத்துக் காட்டுவதாகும்.
   4) இயற்கையான மனித உருவத்தை யதார்த்தமாகப் பயன்படுத்தியுள்ளமையாகும்.
   5) வர்ணத்துக்கும் ஒளிக்குமான தொடர்பு பற்றிய பஸ்ரல் ஊடகத்தினால் செய்யப்பட்டதோர் ஆய்வு முயற்சியாகும். (...........)

30. இத்தாலிய மறுமலர்ச்சிக் கலைஞர்கள்.
   1) மனித உருவை யதார்த்தமாகச் சித்தரிப்பில் நிபுணத்துவம் மிக்கவர்கள்.
   2) கோடுகளையும் வர்ணங்களையும் சமனிலையில் கொண்டு ஓவியங்களை வரைந்தனர்.
   3) சிலை நிர்மாணிப்பதை விட ஓவியங்கை வரைவதில் திறமையானவர்களாவர்.
   4) யதார்த்த கலைக் கோட்பாடுகளைச் சிறப்பாக மேம்படுத்தினர்.
   5) கோட்பாடுகளைப் பயன்படுத்தி கருத்து வெளிப்பாட்டு மனித உருவங்களை வரைவதில் தேர்ச்சி மிக்கவர்களாவர். (...........)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

❖ **31 தொடக்கம் 35 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையை அதற்கு முன்னாலுள்ள நிர்மாணிப்புகளின் உருவப் படங்களை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்க.**

31. அருகில் காட்டப்பட்டுள்ள காவற்கல் செதுக்கலானது,



1) அனுராதரபுரக்காலத்தின் செதுக்கல்களை நினைவு படுத்துகின்றது.
2) நாகர் மன்னனின் உருவத்தைச் சித்தரிக்கின்ற சிறுபடைப்புச் செதுக்கலாகும்.
3) பல்வேறு குறியீடுகள் ஒன்றிணைந்த புதிய நிர்மாணிப்பாகும்.
4) விகாரைகளின் நுழைவாயிலில் பாதுகாப்பின் குறியீடாக நிர்மாணிக்கப்படுவதாகும்.
5) அனுராதபுரக் காலத்தில் மிக உன்னதமான காவற்கல் என கணிப்பிடப்படுகிறது.

(............)

32. அருகில் காட்டப்படும் இசுருமுனியாவில் உள்ள கற்பாறையில் செதுக்கப்பட்ட செதுக்கல்,



1) கலைப் பாணியுடன் கூடிய பண்பினை சித்தரிக்கும் புடைப்பு செதுக்கல்.
2) இயற்கை கற்பாறையின் அமைப்பை உபயோகித்து செதுக்கப்பட்டுள்ள உயர் புடைப்பு நிருமாணிப்பு.
3) யானைகளின் இயற்கையான செயற்பாட்டு அசைவுகளை சித்திரக்கின்ற புடைப்பு நிருமாணிப்பு.
4) நீரைப் பெறுவதன் பொருட்டான குறியீட்டை வெளிக்காட்டும் உயர் புடைப்பு நிர்மாணிப்பாகும்.
5) யானைகளின் இயற்கையான மெய் நிலைகளைச் சித்தரிக்கும் முழுமைப் புடைப்பு செதுக்கலாகும். (............)


33. அருகில் காட்டப்படும் செதுக்கலானது,

1) 4ம் புவனேகபாகு காலத்து யாப்பகூவ மாளிகையில் செதுக்கப்பட்டுள்ள கற்தகட்டுச் செதுக்கலாகும்.



2) 1ம் புவனேகபாகு அரசன் காலத்தில் யாப்பகூவ மாளிகையின் நுழைவாயில் மண்டப அடித்தளத்தில் காணப்படும் கற்தகட்டுச் செதுக்கலாகும்.
3) கடலாதெனிய விகாரையின் தூண்களில் காணப்படும் தகட்டுச் செதுக்கலாகும்.
4) இசை நடனக் கலைஞர்களைக் காட்டும் கம்பளைக் கால தகட்டுச் செதுக்கலின் ஒரு பகுதியாகும்.
5) பாமர மக்களின் வாழ்க்கையில் இணைந்துள்ள நிகழ்வுகளை வெளிக்காட்டும் தகட்டுச் செதுக்கலாகும். (............)

34. அருகில் காட்டப்பட்ட செதுக்கல்,



1) டேசியன் யுத்த யுத்த வெற்றியை நினைவுபடுத்த கொன்சன்ரைன் சக்கரவர்த்தியினால் நிர்மாணிக்கப்பட்ட தூண் செதுக்கலாகும்.
2) டேசியன் யுத்த வெற்றியை நினைவுபடுத்துவதற்கு ரயிற்ரஸ் சக்கரவர்த்தியால் கட்டப்பட்ட வளைவுச் செதுக்கலாகும்.
3) யுத்த காட்சிகளைக் கொண்ட கொன்சன்ரைன் சக்கரவர்த்தியினால் நிர்மாணிக்கப்பட்ட அரைவளைவுச் செதுக்கலாகும்.
4) உரோமானியர்களின் வல்லமை பராக்கிரமத்தை வெளிப்படுத்தும் கட்டிட நிர்மாணங்களிடையே மிக உயரிய நுட்பத்தை வெளிப்படுத்தும் செதுக்கலாகும்.
5) டேசியன் யுத்த வெற்றியை நினைவூட்ட ரஜன் சக்கரவர்த்தியால் கட்டப்பட்ட ரஜன் தூண் செதுக்கல் தொகுதி. (............)

35. அருகில் காட்டப்பட்டிருப்பது.




1) சாஞ்சித்தூபியின் கல்வேலியாகும்.
2) பாரூத்தூபியின் கல்வேலியாகும்.
3) அமராவதிதூபியின் கல்வேலியாகும்.
4) புத்தகாய தூபியின் கல்வேலியாகும்.
5) சாதவனர்களால் அமைக்கப்பட்ட கல்வேலியாகும்.

(............)

Agaram.LK - Keep your dreams alive!

agaram.lk

❖ **வினா இல 36 - 40 வரையுள்ள வினாக்களுக்கு பின்வரும் சித்திரத்தைப் பயன்படுத்தி விடைகளைத் தெரிவு செய்க.**



36. இங்கு காணப்படும் ஓவியம்
    1) அகவய யதார்த்த வாத ஓவியமாகும்
    2) அரூபவாதச் சித்திரமாகும்
    3) கன வடிவவாதச் சித்திரமாகும்
    4) மனப்பதிவு வாதச் (impressionism) சித்திரமாகும்.
    5) பிற்பட்ட மனப்பதிவு வாதச் சித்திரமாகும் (............)

37. இச்சித்திரம் வரையப்பட்டது.
    1) எட்வேட் மனேயினால் 2) கமிளி பியாறோவினால் 3) கிளோட் மொனேயினால்
    4) எட்கா டெகாவினால் 5) பியறே ஒகஸ்ட் றெனோவினால் (............)

38. இச்சித்திரத்தை வரையும் பொழுது கலைஞரின் எண்ணமாக இருந்தது.
    1) சூரியன் பிரகாசிக்கும் தன்மையை இயற்கயாக வெளிப்படுத்தல்.
    2) சூரியன் உதிக்கும்பொழுது ஒளியியல் உடனடியாக ஏற்படுகின்ற மாறுபடுகின்ற இயல்பைச் சித்திரமாக வரைதல்.
    3) நீரின் மீது சூரிய ஒளி விழுந்துள்ள தன்மையை வெளிப்படுத்தல்.
    4) அதிகாலையில் சூரிய ஒளி விழுவதனால் நீர் மாறுபடுகின்ற தன்மையைக் காட்டுதல்.
    5) சூரியன் மறையும் சந்தர்ப்பத்தின் அழகைச் சித்திரமாக்கல். (............)

39. இச் சித்திரம் சலோனினால் தவிர்க்கப்படுவதற்கான காரணம்.
    1) இதில் வடிவமைப்புக்களின் ஒழுங்கமைப்பு காணப்படாமையினால்
    2) இயற்கையான உதயத்தை வெளிக்காட்டும் போது பின்பற்ற வேண்டிய மரபு ரீதியான பண்புகள் இங்கு காணப்படாமையினால்.
    3) நிச்சயமான வடிவமைப்பைக் காட்டுவதற்கு திறமையற்றமையினால்.
    4) சமமான வர்ணப் பண்பாட்டு முறை, நுட்பம் ஆகியன பயன்படுத்தப்படாமையினால்.
    5) உண்மையான நிகழ்ச்சி சித்திரத்தில் வெளிப்படுத்தப்படாமையினால். (............)

40. இச் சித்திரம் தற்கால விமர்சகர்களின் வரவேற்பையும் பாராட்டையும் பெற்றதற்கான காரணம்.
    1) நீரின் மீது சூரிய ஒளி விழுகின்ற தன்மை இரசனையுடன் வெளிப்படுத்தப்பட்டிருப்பதால்
    2) சூரிய உதயத்தில் ஒளியில் உடனடியாக ஏற்படுகின்ற மறுபாடுகளின் இயல்பைப் புதிய தன்மையில் ஒவியமயமாக்கப்பட்டுள்ளமையால்.
    3) சூரிய உதயத்தில் வெளிப்படுகின்ற அழகைக் கடும் வர்ணத்தின் தடிப்பான தூரிகைத் தடங்கள் மூலம் சித்திரமாக்குவதற்கு எடுக்கப்பட்ட முயற்சி என்பதனால்.
    4) கலைக் கூடத்திலிருந்து வெளிப்பட்டு இயற்கைத் தன்மைகளின் உண்மையை ஆராய்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சி என்பதனால்.
    5) சூரிய உதயம் பற்றிய கலைஞரின் உள்ளத்தில் உருவான சௌந்தரியம் யதார்த்த முறையில் சித்திரத்தில் வரையப்பட்டுள்ளமையால். (............)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!


agaram.lk

www.agaram.lk

## பகுதி II

❖ அ பகுதியிலிருந்து இரு வினாவும், ஆ, இ பகுதிகளில் இருந்து ஒரு வினா வீதம் தெரிவு செய்து, எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக

### உப பகுதி 'அ'
### (சித்திரக்கலையில் மதிப்பீடும் இரசனையும் - இலங்கை)

**01. இலங்கை கலைசங்கமும், 43 வது குழுவும் இருவேறு திசைகளில் பயணித்த நிறுவனங்களாகும்.**

i) இலங்கை கலைச்சங்க ஓவியர்கள் இருவரினை பெயரிடுக. (2 புள்ளிகள்)

ii) கொழும்பு பொறளை கோதமி விகாரை சுவரோவியங்களில் 43வது குழுவின் செல்வாக்கில் ஏற்பட்ட மாற்றங்களை சுருக்கமாக குறிப்பிடுக. (5 புள்ளிகள்)

iii) இலங்கை கலைச்சங்க ஓவியர்களின் ஓவியங்களுக்கும், 43 வது குழு ஓவியர்களின் ஓவியங்களிடையே காணப்படும் பண்பு ரீதியான வேறுபாடுகளை விமர்சிக்குக. (8 புள்ளிகள்)

**02. இலங்கையில் புத்தசிலைகள் உருவாக்கப்பட்ட காலத்தின் பிரதிபலிப்பை வெளிப்படுத்துகிறது.**

i) அனுராதபுரக்கால நின்நிலை புத்தசிலைகள் இரண்டு தருக. (2 புள்ளிகள்)

ii) இலங்காதிலக புத்தசிலை / கடலதெனிய புத்தசிலைகளில் அவதானிக்கக்கூடிய அக்கால கலைப்பண்புகளை சுருக்கமாக மதிப்பிடுக. (5 புள்ளிகள்)

iii) கல்விகாரை புத்தர்சிலைகள் மகாயான பௌத்த சமயத்தை அடிப்படையாகக் கொண்டு நிர்மாணிக்கப்பட்டவை. இக்கூற்றினை விமர்சிக்குக. (8 புள்ளிகள்)

**03. அநுராதபுரக்கால ஓவியக்கலையின் ஒரு தொடர்ச்சியாகவே பொலன்னறுவைக்கால ஓவியங்கள் அமைகின்றன.**

i) அநுராதபுரக்கால ஓவியங்கள் வரையப்பட்டுள்ள இரண்டு இடங்களைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ii) கல்விகாரை வித்தியாதாரக் குகையில் வரையப்பட்டுள்ள ஓவியங்களை சுருக்கமாக மதிப்பிடுக. (5 புள்ளிகள்)

iii) பொலன்னறுவை திவங்காலய ஓவியங்களில் காணக்கூடிய அநுராதபுரப் பண்புகளை உதாரணத்துடன் விமர்சிக்குக. (8 புள்ளிகள்)

### உப பகுதி 'ஆ'
### (சித்திரக்கலையில் மதிப்பீடும் இரசனையும் - இந்தியா)

**04. மகாயான பௌத்தத்தைத் தழுவிக்கொண்ட குஷாணர்களின் அனுசரணையில் உருவான காந்தாரக் கலை வெளிநாட்டுக்கலை மரபுகளின் கலவையுடன் தோன்றியதொரு பௌத்த கலை மரபாகும்.**

i) காந்தாரக் கலைஞர்களால் நிர்மாணிக்கப்பட்ட இருந்தநிலைச் சிலை இரண்டைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)

ii) 'ஹோர்ட்டிமந்தார்' சிலை பற்றிச் சுருக்கமாக அறிமுகம் செய்க. (5 புள்ளிகள்)

iii) "காந்தார புத்தர் சிலைகளின் தோற்றத்தில் தாக்கம் செலுத்திய வெளிநாட்டுச் செல்வாக்குகள் சமகால குருகுலமான மதுரா கலைஞர்களிடத்தில் காணக்கிடைக்கவில்லை" உதாரணங்களுடன் விளக்குக. (8 புள்ளிகள்)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

**05. பல்லவர் பேரரசின் ஆட்சியைக் கைப்பற்றிய சோழர்களால், அதன் கட்டடக்கலையும் சிற்பக்கலையும் முன்னோக்கிக் கொண்டுசெல்லப்பட்டது.**

i) மகாபலிபுரத்தில் (மாமல்லபுரத்தில்) பல்லவர்களின் கட்டடக்கலை மரபுக்குரிய கட்டடங்கள் இரண்டைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)

ii) 'ஆகாயகங்கையின் இறக்கம்' என்ற செதுக்கலில், கலைஞர் பாறையின் இயற்கையான அமைப்பை நுட்பமாகக் கையாண்டுள்ள விதத்தைச் சுருக்கமாக விவரிக்குக. (5 புள்ளிகள்)

iii) சோழ கட்டடக்கலை நிர்மாணிப்பில் ஒன்றைப் பெயரிட்டு, அவற்றின் நிர்மாணிப்பு மாதிரி, கட்டமைப்பு என்பன பற்றி பகுப்பாய்க. (8 புள்ளிகள்)

**உப பகுதி 'இ'**

**(சித்திரக்கலையில் மதிப்பீடும் இரசனையும் - ஐரோப்பா)**

**06. கிரேக்க பாணியைப் பின்பற்றிப் போஷிக்கப்பட்ட உரோமக் கலையினால் ஐரோப்பாவில் புதியதொரு கலாசாரத்தை உருவாக்க முடிந்தது.**

i) கிரேக்க செந்நெறிக்கால சிலைகள் இரண்டைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ii) ஜூலியஸ் சீசரின் மார்பளவுச் சிலை, உரோமக் கலைஞர்களால் உருவான பெறுமதி வாய்ந்ததொரு நிர்மாணிப்பாகும், அதன் கலைப்பண்புகளைச் சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)

iii) கிரேக்கத்தின் கெலனிஸ்டிக்கால சிலைகள் ஏனைய காலங்களை விட முன்னேற்றமடைந்திருந்த விதத்தினை உதாரணங்களுடன் விளக்குக. (8 புள்ளிகள்)

**07. சுயாதீனக் கலைஞர்களின் புதிய தேடலின் விளைவு மனப்பதிவு வாதத்தின் தோற்றமாகும்.**

i) எட்காட் டெகாசின் இரு ஓவியங்களைத் தருக? (2 புள்ளிகள்)

ii) மனப்பதிவு வாத ஓவியங்களின் பண்புகளை சுருக்கமாகக் குறிப்பிடுக? (5 புள்ளிகள்)

iii) கிளொட் மொனேயின் றோவுன் தேவாலாயம் என்ற ஓவியத்தில் காணப்படும் மனப்பதிவு வாத பண்புகளை மதிப்பிடுக? (8 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

www.agaram.lk

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

நான்காம் தவணைப் பரீட்சை - 2021

# Conducted by Field Work Centre, Thondaimanaru.

# 4th Term Examination - 2021

FWC

சித்திரக்கலை - II
Art - II

Gr. 13 (2021)

Three Hours

**அறிவுறுத்தல்கள் :**

- ✶ உமது சுட்டெண்ணைச் சித்திரம் வரையும் தாளின் மறுபக்கத்தில் தெளிவாக எழுதுக.
- ✶ விடைத்தாளைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் கையளிக்கும் போது அது நன்கு உலர்ந்திருத்தல் முக்கியமானது. ஈரமான சித்திரங்கள் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக் கொள்வதற்குச் சந்தர்ப்பம் உள்ளமையினால், அது உங்களுக்குப் பாதகமானதாக அமையலாம்.

❖ **பின்வரும் விடயங்களைக் கவனத்திற் கொண்டு உமக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள செடியுடன்கூடிய பொருள் தொகுதியை வரைந்து வர்ணந் தீட்டுக.**

- ✶ கடதாசிப் பரப்பினைப் பொருத்தமானவாறு பயன்படுத்திச் சித்திர ஒழுங்கமைப்பினைச் செய்க.
- ✶ பொருள்களினதும் செடியினதும் இயல்பு, வெளிப்புறத் தன்மை, பரிமாணம், கண்மட்டம், முப்பரிமாண இயல்பு, தூரதரிசனக் கோட்பாடுகள் ஆகியன பற்றிக் கவனத்திற் கொள்க.
- ✶ பொருள்தொகுதி உமக்குத் தெரிகின்ற விதத்தில் வரைந்து அதன் மீது ஒளி, இருள் விழுகின்ற தன்மையைக் கவனத்திற் கொண்டு வர்ணந் தீட்டுக.
- ✶ வர்ண ஊடகங்களைக் கையாளுகின்ற நுட்பமுறைகளைப் பொருத்தமானவாறு பயன் படுத்துக.
- ✶ பொருள்தொகுதி வைக்கப்பட்டுள்ள பலகையின் அளவைப் பொருள் தொகுதிக்குப் பொருத்தமானதாக மாற்றிக் கொள்ள முடியும்.
- ✶ நீர் வர்ணம், போஸ்ரர் வர்ணம், தூள் வர்ணம், பஸ்ரல் வர்ணம் அல்லது இவ்வூடகங்களைக் கலந்தும் பயன்படுத்திக் கொள்ளலாம்.



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

www.agaram.lk

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
நான்காம் தவணைப் பரீட்சை - 2021

# Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 4th Term Examination - 2021

FWC

| சித்திரக்கலை - II<br>Art - II | Gr. 13 (2021) | Three Hours |
|---|---|---|

Agaram.LK - Keep your dreams alive!

மேற்பார்வையாளருக்குரியது

**நிலைப்பொருட்கூட்ட வரைதல்**



**வைக்கப்படவேண்டிய பொருட்கள்**

- பெட்டி
- துணி
- தேப்போச்சி
- உரித்த பாதி தேங்காய்
- வாளி
- குறோட்டன் கிளை

Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

www.agaram.lk

FWC

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## நான்காம் தவணைப் பரீட்சை - 2021
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 4th Term Examination - 2021

சித்திரக்கலை - III
Art - III

Gr. 13 (2021)

Three Hours

**கவனிக்க :**

- நீங்கள் ஒரு சித்திரத்தை மாத்திரம் வரைய வேண்டும்.
- உங்கள் சுட்டெண்ணையும் உரிய வினா இலக்கத்தையும் விடைத்தாளின் பிறபக்கத்தில் உள்ள கோட்டில் தெளிவாக எழுதுக.
- விடைத்தாளைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்கும் போது உங்கள் சித்திரம் நன்றாக உலர்ந்திருத்தல் வேண்டும். ஈரமான சித்திரங்கள் ஒன்றோடொன்று ஒட்டிக் கொள்ளுதல் உங்களுக்குப் பிரதிகூலமாக அமையலாம்.
- வர்ணந் தீட்டுவதற்கு நீர்வர்ணம், போஸ்ரர் வர்ணம், பெஸ்ரல் வர்ணம் உட்பட கையில் ஒட்டிக்கொள்ளாத எவ்வகை வர்ண ஊடகத்தையும் பயன்படுத்தலாம். (பெல்ற் பேனையைப் பயன்படுத்துதல் உகந்ததன்று)
- வரைவதற்கு வெள்ளைத் தாளும் தேவையானவர்களுக்குத் திசுத் தாளும் வழங்கப்படும்.

**"அ", "ஆ", "இ" பகுதிகளிலிருந்து ஒரு தலைப்பை மாத்திரம் தெரிவு செய்க.**

### பகுதி "அ"
### சித்திர ஒழுங்கமைப்பு

01) மர நிழலில் தியானத்தில் ஈடுபட்டிருக்கும் துறவிகள்
02) சரணாலயப் பூமியில் மிருகங்களைப் பார்வையிடுவோர்
03) மீன் பிடித்து எடுத்துவரும் மீனவர்கள் கரைக்கு திரும்புதல்

### பகுதி "ஆ"
### அலங்கார ஆக்கம்

04) அலரிப் பூக்களையும் இலைகளையும் விருப்பப்படி ஒழுங்குமுறையில் பயன்படுத்தி சீத்தைத் துணி ஒன்றில் அச்சிடுவதற்கு பொருத்தமான பரவுருப அலங்காரம் ஒன்றை 9''x 9'' அளவான பரப்பில் நிர்மாணிக்குக.
05) நவீன பாணியிலான பிராணியொன்றின் வடிவத்தைக் கொண்டு பற்திக் முறையில் வர்ணமிடுவதற்குப் பொருத்தமான $2 \times 3$ அடி அளவிலான சுவர் அலங்காரம் ஒன்றை நிர்மாணிக்குக.
06) சேலை முந்தானைக்குப் பொருத்தமான அலங்காரம் ஒன்றைப் பாரம்பரிய அலங்கரிப்பு அலங்காரங்களிலிருந்து நிர்மாணிக்குக.

### பகுதி "இ"
### கிறபிக் சித்திரம்

07) "நாம் வளர்ப்போம் நாட்டைக் கட்டியெழுப்புவோம்" என்ற தலைப்பில் வர்ண போஸ்ரர் ஒன்றை நிர்மாணிக்குக.
08) பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி ஒன்றின் போது விநியோகிக்கப்படுகின்ற கையேட்டின் முன் பக்கத்தை அலங்கரிப்பதற்கான கிறபிக் சித்திரமொன்றை நிர்மாணிக்குக.
09) பழரசப் போத்தலுக்கான விளம்பர மேலுறை ஒன்றை வடிவமைக்குக. பழரசத்திற்கான பெயரை அதில் இணைக்குக.



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk